OS No:215/2010
Date:05.03.2020
Dw1(Cross continuation)(6th Defendant)
Name:கோகுல்ராவ்
Address:

2முதல் 4 பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

தாவா விவசாயநிலங்களிலிருந்து மதனகோபாலின் வாரிசுகளுக்கு பங்கு கொடுத்தற்கு எழுத்து பூர்வமான ஆவணம் உள்ளதா என்றால் வாய்மொழியாக தான் சொல்லியிருக்கிறோம். பி.வா.சா.ஆ.34 மற்றும் பி.வா.சா.ஆ.35 எத்திராஜுலு நாயுடுவால் போடப்பட்டுள்ள இரண்டு அடமான பத்திரங்களை பைசல் செய்தது யார் என்றால் என் தந்தையார் ஆவார். என் தந்தை ராகேஷ்வரராவ் தான் பணம் அளித்தார் என்று ஏதேனும் குறிப்பிட்டுள்ளதா என்றால் மேற்படி ஆவணங்களில் இல்லை, ஆனால் வேறொரு ஆவணம் சமர்ப்பித்துள்ளேன். பி.வா.சா.ஆ.42 ஆவணத்தில் அடமானத்தில் நாங்கள் பிரதிவாதிகள் 2முதல் 4வரை எழுதி கொடுத்த கடன் பத்திரத்தில் மேற்படி அடமானங்களை பைசல் செய்ததில் எங்கள் பங்கும் கடனாக சேர்க்கப்பட்டதா என்றால் கடன் பத்திரம் என்பதால் சேர்க்கவில்லை. பதிவு செய்யப்படாத அடமானம் பத்திரத்தை எப்போது பைசல் செய்தோம் என்று சொன்னால் Colatral evidence தான் நான் கொடுத்துள்ளேன், 30வருட ஆவணம் என்பதால் வழக்குரையில் உள்ள சங்கதிகளை பொய் என்பதை காட்டுவதற்கு நான் போட்டுள்ளேன். சந்திரகாந்தம்மாளுக்கு பாகம் கிடையாது என்று நான் சொல்லியிருக்கிற போதிலும் பி.வா.சா.ஆ.73 ஆவணம் சந்திரகாந்தம்மாளும் சேர்ந்து எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு, எத்திராஜுலுநாயுடுவின் அம்மா சந்திரகாந்தம்மாளே கிடையாது. மதனகோபாலு நாயுடுவின் வாரிசுகளுக்கு அனைத்து விவசாய நிலங்களிலும் பாகம் உண்டு என்று சொன்னால் தவறு. கோவிந்தநாயுடு மற்றும் பூலோகஅம்மாள் உயில் எழுதியது சில சொத்துக்களுக்கு மட்டும் தான் என்று சொன்னால் சரியல்ல. ஆனால் நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் சில சொத்துக்கள் என்று கூறியுள்ளது தவறு என்று சொன்னால் தவறு. விவசாய நிலங்களை பொறுத்து 2முதல் 4பிரதிவாதிகளின் தகப்பனார் மதனகோபால் ராவ் எந்தவிடுதலை பத்திரத்திரமும் என் தந்தையாருக்கு அளிக்கவில்லை என்று சொன்னால் வாய்மொழியாக ஏற்கனவே குடும்ப செட்டில்மெண்டு ஆனது, அதைத் தவிர மதனகோபால் 1985ல் இறந்து விட்டார். வாய்மொழி குடும்ப ஏற்பாட்டை பற்றி என் எதிலுரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் ஏற்கனவே குடும்ப ஏற்பாடுகள் நடந்ததை சொல்லியிருக்கிறேன். அதை குறித்த விவரங்களான தேதி, வருடம்,

பகிர்ந்து அளிக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளேனா என்றால் என் தந்தை, தாத்தா காலத்தில் நடந்தவிட்டபடியால் எனக்கு சரியான விவரங்கள் தெரியாததால் நடந்தது பற்றி மட்டும் கூறினேன். பி.வா.சா.ஆ.73 குடும்ப ஏற்பாட்டிற்கு முன்னால் செய்யப்பட்டதா அல்லது பின்னால் செய்யப்பட்டதா என்றால் அடமானம் போட்ட நாள் அந்த தாவா சொத்தை பொறுத்த வரைக்கும் பின்னால் செய்யப்பட்டது.

**(2முதல் 4 பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)**